**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 65/2022**

**Prosecution witness : அ.சா.1** **Date : 19.02.2026.**

| | |
|---|---|
| **Name : கோவிந்தராஜ்** | **Taluk :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Age :** |

**(Accused 2 present. ) (Accused others absent. Petition filed and allowed)**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–**

1) சம்பவம் நடந்த தேதியில் எத்தனை மணிக்கு மருத்துவமனைக்கு சென்றேன் என்றால் மாலை 6 மணியிலிருந்து 7 மணிக்குள் இருக்கும். மருத்துவர் என்னை விசாரித்த போது 3 ஆண், 3 பெண் என்னை இரும்பு ராடு, கல், கத்தி ஆகியவற்றால் தாக்கியதாக சொல்லியுள்ளேனா என்றால் நினைவில்லை. முதல் விசாரணையில் போது உருட்டு கட்டையால் தாக்கி கொடுங்காயம் ஏற்படுத்தியதாக சொல்லியுள்ளேன் என்றால் ராடு மற்றும் உருட்டு கட்டையால் தாக்கியதாக சொல்லியுள்ளேன்.

2) உருட்டு கட்டையால் அடித்தால் கொடுங்காயம் ஏற்பட வாய்ப்பில்லை என்றும் மருத்துவரிடம் நான் உருட்டு கட்டையால் தாக்கியதாக சொல்லவில்லை என்றால் சரியல்ல. எத்தனை நாட்கள் மருத்துவமனையில் இருந்தேன் என்றால் 10 நாட்கள் இருந்தேன். மேட்டூர் அரசு மருத்துவமனையில் தான் நான் சிகிச்சை பெற்றேன். மேல் சிகிச்சைக்காக சேலம் அரசு மருத்துவமனைக்கு சென்றேனா என்றால் இல்லை.

3) கொடுங்காயம் ஏற்பட்டதற்குண்டான சான்றாவணம் ஏதாவது போலீசாரிடம் ஒப்படைத்தேனா என்றால் இல்லை. மருத்துவரிடம் தான் உள்ளது. மருத்துவர்

சாட்சியம் அளிக்கும் போது அது சம்மந்தமான ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

4) நான் வாங்கிய சொத்திற்கு இன்று தேதி வரை என் பெயரில் வருவாய் துறை ஆவணம் மாறியுள்ளதா என்றால் இல்லை. தடங்கல் மனு கொடுத்துள்ளதால் மாறவில்லை. இன்று வரை மேல் முறையீடு நிலுவையில் உள்ளது என்றால் ஆமாம். எனக்கு சாதகமாக தீர்ப்பு வந்தது. நான் தான் வீட்டை சுற்றி வேலி அமைத்து எதிரிகள் வீட்டை விட்டு வெளியே வரவிடாமல் தடுத்து வருகிறேன் என்றால் இல்லை.

5) மேச்சேரி போலீசாரை நான் தொந்தரவு செய்ததாக CC 199/2020 என்ற வழக்கில் 02.02.2026ம் தேதி 1 வருடம் இதே நீதிமன்றத்தில் தண்டனை கொடுக்கப்பட்டுள்ளது என்றால் ஆமாம். அடிதடி வழக்கானது CC 475/2024 என்ற எண்ணில் இதே நீதிமன்றத்தில் நடைபெற்று வருகிறது என்றால் ஆமாம். நான் அந்த பகுதியில் ரியல் எஸ்டேட் செய்து கொண்டும், ஆட்களை வைத்துக் கொண்டும் பிள்ளை இல்லாதவர்களின் சொத்தை குறைந்த விலைக்கு வாங்கிக் கொண்டு உரிய உரிமையாளர்களை மிரட்டி போலீசார் உதவியுடன் பொய் வழக்கு போட்டு இடையூறு செய்வது வாடிக்கை என்றால் சரியல்ல.

6) உண்மையில் நான் தான் எதிரியை அடித்து போதுவிற்கு காயம் ஏற்பட்டது என்றும் அதிலிருந்து தப்பிக்க மேச்சேரி காவல் துறை உதவியுடன் தவறான ஒரு புகார் கொடுத்து அதன் பேரில் இந்த வழக்கு பதியப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் சொன்னவாறு சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் தேதியில் எனக்கு எந்த ஒரு கொடுங்காயமும் ஏற்படவில்லை என்றும் பொய் புகார் கொடுத்து எதிரிகள் மீது பொய் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. இவ்வாறு காவலர்கள் எனக்கு சாதகமாக இல்லாததால் தான் நான் போலீசாரிடம் பிரச்சனை செய்ததால் அது சம்மந்தமான வழக்கில் எனக்கு ஒரு வருடம் தண்டனை வழங்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

Myilswamy

Digitally signed by Myilswamy
Date: 2026.02.20 11:20:33 +0530

Judicial Magistrate No.II,
Mettur.